முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 131/2018

வாதி தரப்பு சாட்சி -1 தங்கவேல் திரு.ஆர்.ஞானசேகர் பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தங்கவேல் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | குட்டயப்பன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 66 |

**7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அரசு அதிகாரிகளை வழக்கில் எதற்காக தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் UDR ல் தவறுதலாக பெயர் மாறிவிட்டதால் அதை திருத்தம் செய்ய அரசு அதிகாரிகளை சேர்த்துள்ளேன். தவறுதலாக பெயர் மாறிவிட்டது என அரசு அதிகாரிகளிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. விளம்புகை பரிகாரம் கேட்காமல் பட்டாவுள்ள பெயரை திருத்தம் செய்ய முடியாது என்றால் சரியல்ல. உரிய மனு கொடுத்தால் அதன் மீது விசாரணை செய்து தவறை திருத்தம் செய்ய அரசு தரப்பில் தயாராக உள்ளனர் என்றும், ஆனால் நான் மனு எதுவும் கொடுக்காமல் அவர்களை இவ்வழக்கில் தேவையற்ற தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே 7 முதல் 10 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
Kulithalai.